# இராவணனின் சிந்தாமணி மருத்துவம்

**சு.அபர்ணா & திரு.வீ. கோபிநாத்**
**உளவியல் துறை உதவிப் பேராசிரியர்**
**பூ.சா.கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை**

35

**ஆய்வு நோக்கம்:**

இராமாயணத்தில் அரக்கனாக கருதப்படும் இராவணன் தமிழில் பல நூல்களை படைத்துள்ளார் அதில் மருத்துவ நூல்களும் உண்டு. அதில் முக்கியமானது "சிந்தாமணி மருத்துவம்" இதன் சிறப்பை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையை சிறப்பாகவும் செழிப்பாகவும் ஆட்சி செய்த இராவணன், இசை, இலக்கியம், மருத்துவம் மற்றும் சிறந்த அறிவியல் ஞானம் பெற்றவர். இவர் எழுதிய மருத்துவ நூல்களில் ஒன்று " சிந்தாமணி மருத்துவம்" ஆகும். இத்தகைய நூலில் மக்களின் வாழ்க்கை முறை, நோயாளிகளின் பராமரிப்பு,உணவுமுறை, சிந்தாமணி மருத்துவத்தின் பயன்கள்,பங்குகள் பற்றி இக்கட்டுரையில் எழுதுகிறேன்.

**திறவுச் சொற்கள்** :

1. சிந்தாமணி மருத்துவம்
2. ராவணன்
3. நோய்கள்
4. மூலிகைகள்
5. வேர்கள் மற்றும்
6. மருந்து

**முன்னுரை**

இராவணன் இலங்கையை சிறப்பாக ஆட்சி செய்த அரசர், இவரது இயற்பெயர் சிவதாசன், நிலவழகி பாண்டியன் ஆகும். மேலும் இவருக்கு தசக்கிரீவன், இலங்கேஸ்வரன், இராவணேஸ்வரன், திரிலோக அதிபதி என்று பல பெயர்கள் உண்டு.பெரும் சிவபக்தரான இராவணன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் சிவனுக்காக 6 கோவில்கள் கட்டபட்டாதாக வரலாறுகள் கூறுகிறது. ஆனால் வால்மீகி படைத்த இராமயணத்தில் பத்து தலை கொண்ட அரக்கன் என சித்தரிக்கபட்டுள்ளார்.இசை, வான சாஸ்திரம், அரசியல், மனோ தத்துவம், மந்திரம், மருத்துவம், ஜோதிடம், விஞ்ஞானம், ஓவியம், இலக்கியம் முதலான பத்து கலைகளில் சிறந்து விளங்கியவர் அதனால் தான் அவர் 10 தலை இராவணன் என அழைக்கப்பட்டார். பல கலைகளில் வல்லுநரான இராவணன் 27 நூல்களை படைத்துள்ளார், அவற்றுள் மருத்துவ நூல்கள் உண்டு. இராவணன் மிகச்சிறந்த மருத்துவராகவும்,பல

மருத்துவ குறிப்புகளையும், மருத்துவ நூல்களையும் படைத்துள்ளார்.உடற்கூறு நூல், மலை வாகடம் மாதர் மருத்துவம்; ராவணன் - 12,000, நாடிஎண்வகை பரிசோதனை நூல் போன்றவை அவர் படைத்த மருத்துவ நூல்கள் ஆகும். அதில் முக்கியமானவை இராவணன் படைத்த சிந்தாமணி மருத்துவம் ஆகும்.மேற்காணும் நூல்களில் பல, சங்கரன் கோயில் அருகிலுள்ள '**கரிவலம் வந்த நல்லூர்**' என்னும் ஊரில் அமைந்துள்ள '**பால் வண்ண நாதன்**' திருக்கோயிலில் கருவூலமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



**சிந்தாமணி மருத்துவம்**

சித்த மருத்துவத்துவமே தமிழர்களின் பாரம்பரிய மருத்துவம் என பலர் நினைத்திருக்க தமிழர்களின் முதல் மருத்துவம் மனோன்மணி மருத்துவம், அதற்க்கு பின் இரண்டாவதாக தோன்றியதே சிந்தாமணி மருத்துவம், இதற்கு பிறகு தோன்றியதே சித்த மருத்துவம் ஆகும். இதை படைத்தவர் இராவணன் ஆவார். இந்த சிந்தாமணி மருத்துவம் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது.

இராவணன் இந்த சிந்தாமணி மருத்துவக் குறிப்புகளையெல்லாம் செம்புப் பட்டயத்திலும், தாழி ஓலையிலும் எழுதியிருக்கிறார். சிந்தாமணியில் 600 பாடல்கள் இருந்தது அதில் சில பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளது இதற்கு காரணம் மக்கள் பழைய நூல்களை எல்லாம் தண்ணீரில் போடும் மூடநம்பிக்கையில் அதில் பலகுறிப்புகளை தண்ணீரில் போட்டு தொலைத்துவிட்டனர்.இந்த வகையான சிந்தாமணி மருத்துவம் கேரளத்தில் உள்ள சித்த மருத்துவத்தில் பெரும் இடம் பெற்றுள்ளது. மேலும் வட இந்தியாவிலும் கூட இந்த சிந்தாமணி மருத்துவ குறிப்புகள் இன்றும் புத்தகமாக வெளியிடப்பட்டு மக்கள் அதை பயன்படுத்துகின்றனர்.



**சிந்தாமணி மருத்துவத்தின் வகைகள்:**

சித்த மருத்துவத்தில் அகம்,புறம் இரண்டிலும் 32 பிரிவுகள் உள்ள நிலையில் , சிந்தாமணியில் அக மருத்துவத்தில் 50 , புற மருத்துவத்தில் 608 பிரிவுகள் என விரிவாக கூறப்பட்டுள்ளது.ஆழ்நிலை மயக்கத்தில் இருப்பவர்களை சுயநினைவுக்கு கொண்டுவரும் சிகிச்சை , விபத்தில் சிக்கியவர்களுக்கு ஏற்படும் தீவிரமான காயங்களுக்கான மருத்துவ முறைகளை தெளிவாக கூறியுள்ளார்.

**பாட்டி வைத்தியம்:**

பாட்டி வைத்தியம் இதை பாரம்பரிய மருத்துவ முறை என்றும் அழைப்பார்கள். நம் தினசரி வாழ்க்கையில் நம் பயன்படுத்தும் பொருட்களை வைத்து சிறு மற்றும் கொடிய வியாதிகளில் இருந்து மக்கள் தங்கள் உடல் நிலை இதன் மூலம் காத்து வருகின்றனர். இது முற்றிலும் உணவே மருந்து என்ற அடிப்படையில் இயங்குவது.இத்தகைய பாட்டி வைத்தியத்திலும் கூட சிந்தாமணி மருத்துவத்தின் பங்கு வகிக்கிறது.இந்த வகையான பாட்டி வைத்தியம் சிந்தாமணி மருத்துவத்தின் வகைகளுள் ஒன்று ஆகும்.

**சிந்தாமணியின் பயன்பாடுகள்**:

பதினோறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பெரும் நோயினால், பல குழந்தைகள் இறந்து போயின எந்த மருத்துவமும் உதவாத நிலையில் அவர்கள் "**ராவண குமார தந்த்ரா**" என்ற நூலில் கிடைத்த மிகப்பழைய மருத்துவ சிகிச்சையை கையாண்டனர். இராவணனின் குழந்தைகள் மருத்துவம் பயன்படுத்திய பின் இறப்பு விகிதம் குறைந்து. இதை David Gordon White" என்பவர், தன்னுடைய "The Alchemical Body Siddha Traditions in india" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.இந்நூலை "ராவண குமார தந்த்ரா" என்றும் இதற்கு "ராவண பிரக்தவல சூத்திரா" என்ற மற்றொரு பெயரும் உண்டு.

மூலிகை வேர்களின் சக்திகளையும்,அவற்றின் மூலம் குணப்படுத்தும் நோய் சிகிச்சை முறைகளையும்,

காயங்களை குணப்படுத்தக்கூடிய சிந்துரம் மருத்துவம், அத்தியாவசிய எண்ணெய்களின் பல்வேறு சிகிச்சைகள், குறித்து இராவணன் விரிவாக எழுதியுள்ளார்.

பாம்பு கடித்துவிட்டால் வாய்வழியாக மருந்துகொடுப்பதை விட, சிந்தாமணி மருத்துவம் ரத்தத்தில் மருந்துகொடுக்கும். அப்போது பாம்பின் விஷத்தை விட, மருந்து வேகமாக வேலைசெய்யும் இவ்வகையான அவசர நிலைகளில் கூட சிந்தாமணி மருத்துவம் தீர்வுகளை வழங்குகிறது.

இந்த சிந்தாமணி மருத்துவம் மூலம் அறுவை சிகிச்சைகூட செய்ய முடியும் என்று குறிப்புகள் கூறப்படுகிறது மற்றும் இந்த மருத்துவத்தில், ஒருவருக்கு இரத்த அழுத்தம் வரும் என்பதை 30 ஆண்டுகளுக்கு முன்பே கணிக்கமுடியும். சிந்தாமணி மருத்துவத்தால், கோமாவில் படுத்தவர்களைக்கூட மீட்கமுடியும் இவ்வாறு நாடி, மூலிகைகளை பயன்படுத்தி பல நூற்றாண்டுகளுக்கு முன் இராவணன் மருத்துவத்தில் முன்னோடியாக இருந்ததுள்ளார்.

மேலும் இராவணன் பெண்களுக்கான நோய்கள், அதைப் போக்கும் தீர்வுகள் பற்றி மட்டுமே 43 ஆயிரம் பாடல்களை எழுதியிருக்கிறார் அதில் பெண்களின் உடலில் ஏற்படும் மாதவிடாய் பிரச்சனை, அவர்களுக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் பிரச்சனை அதற்கான மூலிகைகள், மருந்துகள் பெண்கள் அவற்றில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றி தெளிவாக கூறியுள்ளார்.

இராவணன் படைத்த **அர்க சாஸ்த்ரா** என்னும் நூலில் ஆண்கள் மற்றும் பெண்களின் பிறப்பு உறுப்புகளில் ஏற்படும் புண்களுக்கும் மற்றும் எந்த நோய்க்கு எந்த மருந்துகள்,எவ்வளவு அளவுகளில் எடுக்கப்பட வேண்டுமென்று விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு அவற்றுக்கான மருத்துவ முறைகள் பற்றி **நாடி பரிக்ஷா** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் இதன் மூலம் துல்லியமாக உடல், மன மற்றும் உணர்ச்சி ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நோய்களை கண்டறிய முடியும்.





**சிந்தாமணியில் புற மருத்துவம்:**

சிந்தாமணி மருத்துவத்தில் விபத்துகளின் போது ஏற்படும் காயங்களுக்கு சித்த முறையில் சிகிச்சைகள் இல்லை ஆனால் இராவணின் சிந்தாமணி மருத்துவதில்

அதற்கும் தீர்வுகள் உண்டு. முதுகெலும்பு வளைவு, இடுப்பு எலும்பு தேய்மானம், எலும்பு முறிவு, மூளையில் ரத்தக் கசிவு போன்ற நோய்களும் இவரின் மருத்துவ முறையில் தீர்வுகள் உண்டு. இவ்வகையான தீவிரமான நிலைகளில் இருக்கும் நபர்களை குணப்படுத்தக்கூடிய முறைகள் சிந்தாமணியில் உள்ளது

**உணவில் மருத்துவம்:**

"உணவே மருந்து மருந்தே உணவு" என்ற பழமொழி கூறுவது போல். இராவணன் நம் அன்றாட வாழ்வில் மனிதர்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் கட்டாயம் 3 பொருட்களையும், 5 வேர்களையும் எடுத்து கொள்ள வேண்டும் என்ற சிந்தாமணியில் கூறியுள்ளார் நோய்க்கு பின் மருத்துவத்தை விட நோய் வராமல் தடுப்பதே இராவணனின் நோக்கம் அவர் அன்றாட வாழ்வில் சேர்க்க கூறிய பொருட்கள் குருமிளகு, இஞ்சி, பூண்டு மற்றும் கண்டங்கத்தரி,சிறுவழுதுணை,சிறு நெருஞ்சி,சிறுமல்லி, பெருமல்லி முதலிய வேர்களை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நாம் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



**முடிவுரை**

இராவணன் என்று கூறியதும் அரக்கன், என்று நம் அனைவரும் நினைத்திருப்போம். ஆனால் அவர் பல கலைகளில் வல்லுநர் மற்றும் தமிழில் இரண்டாவதாக தோன்றிய **சிந்தாமணி மருத்துவம்** மூலம் அக மருத்துவம் மற்றும் புற மருத்துவ பிரிவுகளில் பல மூலிகைகள், வேர்கள், நோய்கள், அதற்கு முன்னெச்சரிக்கையாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், உணவு முறைகள் பற்றி தெளிவாக கூறியுள்ளார். கி.பி. 10 ஆம் நூற்றாண்டளவில் குமரி, திருவனந்தபுரம் பகுதியில் வழங்கி வந்துள்ள ‘சிந்தாமணி மருத்துவம்’ இன்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களில் பின்பற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**துணை நூற்பட்டியல்:**

1. தமிழ் மருத்துவ நூல் வரிசை - 12 சித்த மருத்துவ சிந்தாமணி (ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

2.https://kamadenu.hindutamil.in/life-style/chintamani-medicinethe-art-of-praising-king-ravana

3.https://www.dailythanthi.com/Others/Devotional/2020/01/07133216/Ravana-medicine-that-is-immortalized-by-time.vpf

4.https://youtu.be/H8ELSRofg7I?si=F6YiCAxUot-yvs0u

5.அனுபவ சித்த வைத்திய சிந்தாமணி

6.https://www.tamildigitallibrary.in/book-detail.php?id=jZY9lup2kZl6TuXGlZQdjZQ8luty

7. https://youtu.be/97y5tqVXeL4?si=szLAtqLqTAVNUMG_

8.https://youtu.be/3wpyDdYQbIw?si=EsMlxoNE5lWa20MO.

9.இராவணன் சுகாதார களஞ்சியம் - கொ.பா.புட்பராசு

10.தமிழ் மருத்துவ தொக்கண முறைகள் - மரு.கொ.பா.புட்பராசு ESMP மரு. பு. சாலின் மனோகர் BSMS